## ஓம் ஈஸ்வராய நமஹ!

## ஆறுமுகனார் தீட்சையின் போது (04 April 2020), அவர் உரைத்த உபதேசம்

கற்றவை யாவும் கருத்தினிலே நிலைத்திருக்க
கண்ட காட்சிகள் யாவும் பதிவுகளாய் நிலைத்திருக்க
கர்மவினைகள் யாவும் திரைகளாய் நிலைத்திருக்க
கலியினிலே வாழ்கின்ற மானுடமே நிலைத்திருக்கும்

அறியாமை ஓங்கி நின்றால் அக ஒளியும் குன்றிவிடும்
புற அறிவு ஓங்கி நின்றால் ஆன்மாவும் புறம் செல்லும்
அகத்தினையே நாடி நின்றால் உள் அறிவும் ஓங்கிவிடும்
அன்பு ஒன்றே ஓங்கி நின்றால் ஞானமது பூத்துவிடும்.

எத்திசையும் நிறைந்திருக்கும் இறையாற்றல்
ஏகாந்தம் அருள்வதும் இறையாற்றல்
இறையாற்றல் உணர்த்திவிடும் குருவாற்றல்
ஈசனையும் ஈர்த்தருளும் குருவாற்றல்.

குருவின் அடிதொழுதிடுவாய்
இன்ப துன்ப நிலை கடப்பாய்
பிறவாது நிலைத்திடுவாய்
வித்தெனவே எழுச்சியுறுவாய்

மானுடம் தழைத்திட்டால் இயற்கை என்பது மலர்ச்சியடையும். ஆன்மாக்கள் மாத்திரமே புவியின் இயக்கத்திற்கும் உதவிடும். பூமித்தாய் என்பவள் ஒவ்வொரு உயிர்களையும் காத்து அருளிடுவாள்.

Copyright © 2019 Gnanalayam

மண்ணுலகம் என்பது விண்ணிலிருந்து உதித்திட்ட ஆன்மாக்களை துணையாகக் கொண்டு இயங்குகின்றது. உயிர்கள் அற்ற புவிக்கோளில் இயக்கம் மலர்ந்துவிடாது. எனினும் தொடர் இயக்கமும் நற்பலனை நல்கிடாது. புவியானது புணரமைப்பு கொண்டுவிட முனைகின்றது. அத்தருணத்தில் புவியின் நற்செயலுக்கு ஒவ்வொரு ஆன்மாவும் உறுதுணையாகச் செயல்புரிந்திடல் வேண்டும்.

ஆன்மாவினை விடுவித்து, பிறவா வரம் பெற்றிட்டால் புவியின் புணரமைப்பும் எளிதாகும். அன்றி ஆன்மாவினை அழித்தும் நிகழ்வுகள் நிகழ்ந்தேறிடும்.

கலியினிலே வாழ்கின்ற மானுடர்களே! இறைநிலை புகட்டுகின்ற போதனைகளை ஏற்றிடுங்கள். கலியின் சுயரூபம் கண்டு நிலைத்திருக்கும் இத்தருணத்தில் பிறவாமை ஒன்றே தீர்வு என்றே ஏற்றிடுங்கள். ஆன்மாவின் விடுதலையும் சுயமுயற்சியினால் தோன்றிடாது, அகத்தியரின் துணையின்றி கலியினிலே மீண்டிடாது.

சத்திய நிலைகளை நிதர்சனமாய் உணர்ந்திடுங்கள், குருவின் நற்செயலைத் துதித்தே ஏற்றிடுங்கள். நலமுடன் வாழ்தல் ஒன்றே எனினும் கலியின் எல்லையில் கடினமான செயல் என்பதனைத் தீர்க்கமாய் உணர்ந்து, முக்திநிலைதனை எய்தி, கலியினிலே மீண்டும் பிறவி கண்டுவிட முனைந்திடாது செயல்புரியுங்கள். உணர்ந்த மார்க்கமாம் ஒளி மார்க்கம் தனில் பயணித்து ஈசனை அடைந்து கலந்தே களிப்புற்றால் கலியினையும் கடந்திடலாம். ஆன்மாவினையும் மீட்டுவிடலாம்.

அறிவு பெருகினால் நன்றே எனினும் அவை புற அறிவாய் மலர்ந்திட்டால் பயனில்லை. அக அறிவுதனை மலர்த்தி, ஞானமாய் உருவேற்றி ஆன்மாவினை விடுவித்து ஒளிரூபம் கண்டிடல் வேண்டும். சுயத்தினை உணர்ந்து, சுயம்புவாய்

ஒளிர்கின்ற ஆன்மாவினை உணர்ந்து, சுயம்புவினை உருவாக்கிய ஈசனை உணர்ந்து, எல்லையற்ற பெருவெளியின் ஆற்றல்களை உணர்ந்து, கலியினிலே ஒரு துரும்பெனவே நிலைத்திடாது, சத்யயுகம் தனில் ஒரு உயரிய விருட்சமாய் நிலைத்துவிட சபதம்தனை ஏற்றிடுங்கள்.

அற்புத வாழ்வு என்பது சத்யயுகம் தனிலே கிட்டிடும் என்றும், கலியினிலே பிறவாமை கண்டால் கற்பகமாய் நிலைத்திடலாம் என்றும், புவியும் ஈசனும் இணைந்திட்டால் யுகமாற்றம் நிகழ்ந்துவிடும் என்றும் பூரணமாய் ஏற்றிடுங்கள்.

சத்யயுக வாழ்வு என்பது விண்ணுலக வாழ்விற்கு ஒப்பாகும். உயரிய தெய்வ நிலை கண்டு மண்ணுலகினை விண்ணுலகமாய் மாற்றிமைத்து புவியினை புணரமைத்துவிட ஆன்மாக்களை விடுவித்தருளிடல் வேண்டும். உயர் ஆன்மாக்களின் துணை கொண்டு கலியினை மாய்த்து பிறவா நிலைதனை ஏற்றுவிடல் வேண்டும்.

**வாழ்த்துகின்றோம்.**

Gnanalayam